**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிவற்ற அபிப்பிராயம்

கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிகூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவு | கம்பனியின் பங்குடமையாளர்களின் உரிமை மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக ஏற்பாடுகள் வழங்கப்படுதல் வேண்டும். கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் அமைப்பு அகவிதியின் இலக்கம் 02 இன் பிரகாரம் கம்பனி திறைசேரியின் செயலாளருக்கும் மற்றும் இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுக்குமிடையே பிரதான உடன்படிக்கை (Master Agreement) ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான பதில் தனியான ஒரு கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனியால் போக்குவரத்துப் படிகளுக்கு தகமை பெற்றிருக்காத 15 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் போது போக்குவரத்துப் படிகளாக ரூபா 1,329,838 தொகையும் 12 உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியாக ரூபா 643,620 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேற்கூறிய படிகளைப் பெற்றுக்கொள்ளும் 15 உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் தொழில் முயற்சி அபிவிருத்தி முகாமையாளருக்கு 2022 நவம்பர் மாதத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரை மேற்கூறிய படிகளுக்கு மேலதிகமாக பிரயாணச் செலவுப் படிகளாக ரூபா 188,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்களுக்கு பகல் இரவில் கம்பனியில் கடமைக்களுக்காக வருகைதர வேண்டி ஏற்படுவதனால் இப்படிகளானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கம்பனியின் மாதாந்த எதிர்பார்த்த சந்தைப்படுத்தல் இலக்கினை நிறைவேற்றும் படிகளாக சரிசெய்யப்படுதல் வேண்டும். இக்கொடுப்பனவிற்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்தின் தொழில்முயற்சிகளுக் கான செயற்பாட்டுக் கையேட்டின் 5.3 ஆம் இலக்க பந்தி | வரிக்குப் பின்னைய இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் பங்கிலாபமாக திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டதன் பின்னர் 30% பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படும். | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையோட்டின் 5.3 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 104,976,979 மிகையாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) மனித வளங்கள் முகாமைத்துவ விசேடத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்** | | |
| கம்பனியால் தமது உடன்படிக்கை செய்யப்பட்ட பணமான ரூபா 900,000 தொகைக்கு மேலதிகமாக இன்னும் ரூபா 700,000 தொகையினைப் பெற்று கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் உத்தியோகத்தர்களின் மனித வள நடவடிக்கைகளுக்காக கொழும்பு தாமரைக் கோபுர வளவில் செயலமர்வினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 02 ஹோட்டல்களில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. அச்செயலமர்விற்காக செலவு செய்யப்பட்ட உள்ளபடியான செலவினை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி 08 மற்றும் 09 ஆந் திகதிகளில் குருவிட்டவில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி மற்றும் மார்ச் 02 ஆந் திகதிகளில் கம்பஹா வெட் வோடர் ரிசோட்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். அதற்காக தனியான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | ஸ்மார்ட் க்விஸ்ட் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கொழும்பு தாமரைக்கோபுரம் தொடர்பான பௌதீக பரீட்சிப்பின் போது கோபுரத்தின் பார்வையிடும் மாடியின் (29 ஆம் மாடி) சுவர்களின் வர்ணப் பூச்சுக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பெயர்கள் மற்றும் பல்வேறு உருவங்கள் கீறப்பட்டிருந்தன. வளவில் பாதுகாப்பு கமரா முறைமை பொருத்தப்பட்டு அதனை மேற்பார்வை செய்வதற்காக ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் உரிய பாதிப்புக்களை கணிப்பீடு செய்து ஆட்களை இனங்கண்டு தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பாதிப்பு ஏற்படுத்துவதனை குறைக்கும் வகையில் தற்பொழுது பார்வையிடும் மாடியில் வெளிச்சத்தினால் ஒளியேற்றப்படும் பிலாஸ்ரிக் பலகை பொருத்தப்பட்டுள்ளது. மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற நபர்களை பாதுகாப்பு பிரிவினாலும் சீ.சீ.ரீ.வி கமரா முறைமையின் மூலமும் அவதானிப்பு செய்யப்படுவதுடன் அதன் மூலம் இனங்காணப்படும் நபர்கள் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பிவைக்கப்படுவார்கள். | தாமரைக் கோபுரத்தினை பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற நபர்களின் துர் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும்.. |
| (இ) 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கையொப்பமிட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரிவு இலக்கம் 7 (b) மற்றும் 2023 ஏப்ரல் 10 அந் திகதி கையொப்பமிட்ட குத்தகை உடன்படிக்கையின் 2.2.(u) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய இயந்திரங்கள் பழுதடையும் காப்புறுதி மற்றும் இலத்திரனியல் காப்புறுதி 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இக்கட்டிடத்தின் சகல வசதிகளும் வணிகமயப்படுத்தப்பட்டிருக்காததனால் தற்பொழுது இயந்திரங்கள் பழுதடையும் காப்புறுதி மற்றும் இலத்திரனியல் காப்புறுதி பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இல்லாததுடன் அனைத்து இடங்களையும் மிக அண்மையில் வணிகமயப்படுத்தியதன் பின்னர் முகாமைத்துவத்திற்கும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவிற்குமிடையே | உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் பொருத்தமான வகையில் கம்பனியின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணக்கப்பாட்டிற்கு வரும் தேவைப்பாட்டிற்கு இணங்க மேற்கூறிய காப்புறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | கம்பனியால் மீளாய்வாண்டில் ரூபா 515,216 தொகையான பெறுமதி சேர் வரி வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படாது கம்பனியின் வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டது. | அக்கண்காட்சியிலிருந்து நிறுவனத்திற்கு கிடைக்கும் ரூபா 1,750,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. | பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தந்திரோபாயத் திட்டத்திற்குச் சமமாக செயல்நடவடிக்கைத் திட்டமும் பாதீடும் தயாரிக்கப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றலினை பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான தந்திரோபாயத் திட்டம் மற்றும் வியாபாரத் திட்டம் இல்லாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் மேற்கூறிய திட்டங்களைத் தயாரித்தலானது மனித வளங்கள் தொடர்பாக கம்பனிக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனை நிறுவத்திற்கு ஸ்மார்ட் க்விஸ்ட் நிறுவனத்தினால் 2024 ஆம் ஆண்டிலிருந்து 2026 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக தயாரிக்கப்படும். | தந்திரோபாய கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டில் பொருட்கள் தொடர்பான வருடாந்த மீளாய்வினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 வரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை. | இணக்கிக்கொள்கிறேன். | ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மீளாய்வினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | 2022 மார்ச் மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை 80 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 35,390,594 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தும் அச்சம்பளங்கள் மற்றும் படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதற்கு எந்த உத்தியோகத்தரும் சம்பளப் பத்திரங்களில் கையொப்பமிட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்கிறேன். அப்போது இக்கம்பனியின் நிதி மற்றும் மனித வளங்கள் பிரிவில் இருந்த மட்டப்படுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின் காரணமாக இச்செயற்பாட்டினை நிறைவேற்றுதல் முறைப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் உத்தியோகத்தர்களிடமிருந்து சம்பளங்கள் மற்றும் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு சம்பளப் பத்திரங்களில் கையொப்பமிடுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் எந்த கிரய பிரதிபலன் பகுப்பாய்வினையும் மேற்கொள்ளாது மீளாய்வாண்டின் செப்தெம்பர் 15, 16, 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் கம்பனி வளவில் கண்காட்சிகளை நடாத்துவதற்காக ரூபா 2,454,000 செலவு செய்யப்பட்டிருந்தது. கம்பனிக்கு இக்கண்காட்சியினை நடாத்துவதற்காக நுழைவுச்சீட்டு வருமானமாக ரூபா 700,000 மாத்திரம் கிடைத்திருந்ததன் காரணமாக ரூபா 1,754,000 நட்டமாக மாறியிருந்தது. | இணங்கிக் கொள்கிறேன். கம்பனியால் செப்தெம்பர் மாதம் 15, 16, 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் இக்கண்காட்சியை நடாத்துவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது அப்போது தாமரைக் கோபுரம் தொடர்பாக பொது மக்கள் அபிப்பிராயம் கொண்டிருக்காததனால் மற்றும் அப்போது பொது மக்களுக்காக திறக்கப்பட்டிருந்தது காட்சிக்கூட வாய்ப்பு மாத்திரம் என்பதனாலாகும். இதன் காரணமாக பொதுமக்களுக்கு தாமரைக் கோபுரத்தினை கவரச் செய்யும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கையாக இக்கண்காட்சியானது கம்பனியின் தொடக்க விழாவிற்குச் சமாந்திரமாக நடாத்தப்பட்டது. காட்சிகூட நுழைவுச் சீட்டு வருமானம் அதிகரித்திருந்ததனால் கண்காட்சியினை செப்தெம்பர் மாதம் 18 ஆந் திகதியின் பின்னர் நிறுத்தப்பட்டது. | கம்பனிக்கு இலாபம் கிடைக்கும் வகையில் கண்காட்சி நடாத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 மார்ச் மாத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரை ஒரு தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்த நுழைவுச் சீட்டுக்களில் ரூபா 2,087,000 பெறுமதியான 49 நுழைவுசசீட்டுப் புத்தகங்கள் பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டு நிதிப் பிரிவில் காணப்பட்ட பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததன் மூலம் அவை பயன்படுத்தப்படாதிருக்கும் ஆபத்து காணப்பட்டது. | இணங்கிக் கொள்கிறேன். குறிப்பிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அனுசரணையாளர்களால் காட்டப்பட்ட அனுசரணைப் பங்களிப்பின் அடிப்படையில் அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்களானதுடன் அனுசரணைக் காலத்தின் முடிவில் அவை வழங்கப்படாது புதிய அனுசரணையாளர்களின் நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கான இணக்கப்பாட்டிற்கு கம்பனி வந்திருந்தது. அதனால் நிதிப் பிரிவிற்கு கிடைத்த திகதியிலிருந்து தற்பொழுது அதாவது இன்றுவரை நிதிப் பிரிவில் காணப்பட்ட பாதுகாப்பு பெட்டியில் திகதி மற்றும் தொடர் இலக்கத்துடன் பாதுகாப்பாக அந்த மிகுதி நுழைவுச் சீட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. | முறைப்படியாக தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டியதுடன் பயன்படுத்தாதனால் ஏற்படும் ஆபத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெயரளவிலான 04 இன்வொயிஸ்களை அடிப்படையாகக் கொண்டு 04 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு ரூபா 1,166,487 தொகையும் விலை ஒப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 03 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு ரூபா 500,000 தொகையும் | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | பெயரளவிலான இன்வொயிஸ்கள், விலை மனுகக்கள், இன்வொயிஸ்களின் போட்டோ பிரதிகள், மின்அஞ்சல், மற்றும் இன்வொயிஸ்கள் |

| | | | |
|---|---|---|---|
| | இன்வொயிஸ்களின் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு 11 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு ரூபா 5,835,078 தொகையும் மின் அஞ்சலினை அடிப்படையாகக் கொண்டு 03 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு ரூபா 185,004 தொகையும் இன்வொயிஸ்கள் இல்லாமல் 03 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு ரூபா 2,445,000 தொகையுமாக 24 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,131,569 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | இல்லாமல் கொடுப்பனவு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி களஞ்சியத்தின் பௌதீக பரீட்சிப்பின் போது ரூபா 149.7 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 1.1 மில்லியன் பெறுமதியான நுழைவுச் சீட்டுக்கள் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் நுழைவுச் சீட்டுக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பாதுகாப்பு கமராக்களை ஒதுக்கி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகள் பாதுகாப்பாக வைக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் ரக்னா லங்கா தனியார் கம்பனியிடமிருந்து பாதுகாப்பு சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக விலைப்பட்டியலுடன் சமூகமளிக்கும் அறிக்கை இல்லாது ரூபா 12,504,910 தொகை செலுத்தப்பட்டிருந்ததனால் பாதுகாப்பு சேவைக்காக நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்களா என்பது கணக்காய்வில் சிக்கலுடையதாக இருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட அனைத்து பாதுகாப்பு சேவைகளுக்குமாக செலுத்தப்பட்ட விலைப்பட்டியல்களுக்காக பாதுகாப்பு பிரிவின் பிரதானியால் கட்டளை விபரக் குறிப்புக்கள் தொடர்பாக மேற்கூறிய சேவைகள் பரீட்சிக்கப்பட்டு சான்றுபடுத்தபட்பட்டுள்ளது. அச்சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பிரிவினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | பாதுகாப்புச் சேவைக்காக கொடுப்பனவு செய்யும் போது சமூகமளித்தல் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 செப்தெம்பர் 21 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,190,250 பெறுமதியான 03 தொலைக்காட்சி இயந்திரங்கள் 2023 செப்தெம்பர் 30 அந் திகதி வரை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | தொடக்க சந்தர்ப்பத்தில் கம்பனியின் விற்பனை மேம்படுத்தலினை முன்னிட்டும் பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் குறிக்கோளிலும் கொள்வனவு செய்யப்பட்ட 12 தொலைக்காட்சி இயந்திரங்களுக்கு மத்தியில் 09 இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதுடன் மிகுதியானவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. | உத்தரவாத காலத்துடன் சொத்துக்களின் தேவைபாட்டினை முறைப்படியாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததனால் நியாயமான பெறுகை மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல்முன்னேற்றத்தினைப் பரீட்சிக்க முடியாதிருந்தது. | கம்பனி 2022 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தாமரைக் கோபுரத்தில் உள்ள வளங்களை ஆய்வு செய்வதற்கும், அதற்கிணங்க விற்பனைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், துறையினை ஆய்வு செய்ததன் பின்னர் ஒரு வியாபாரத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கும் தேவைப்படுகின்ற உயர் முகாமைத்துவத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்கள் சிலர் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.<br>உப பாதீட்டின் மூலம் அத்தியவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக முறையான ஒரு பெறுகைத் திட்டத்தினை தயாரிக்க முடியாதிருந்தது. | ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | **எல்.ஈ.டி திரைகளை கொள்வனவு செய்தல்** | | |
| | • ஒரு எல்.ஈ.டி திரையினை கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் பொருள் கோரிக்கைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 50,125,000 பெறுமதியான 02 எல்.ஈ.டி திரைகள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>• மேலதிக கேள்வி ஆவணங்களின் இலக்கம் 04 இன் பிரகாரம் மற்றும் கேள்வி வழங்கிய கடித்தின் பிரகாரம் இந்த ஒப்பந்தத்தை பூர்த்திசெய்வதற்கு 180 நாட்கள் வழங்கப்பட்டிருந்தும் ரூபா 38,450,000 தொகையான எல்.ஈ.டி திரையானது அவசர தேவைப்பாடாகத் தெரிவித்து இரண்டாவது ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தன.<br>• கேள்வி ஆவணத்தில் ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 06 இன் கீழ் 10 சதவீத செயலாற்றல் பிணையை சமர்ப்பிக்குமாறு காட்டப்பட்டிருந்தும் 05 சதவீத செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>• கேள்வி ஆவணத்தில் ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 10.2 மற்றும் 29 இன் பிரகாரம் 12 மாத உத்தரவாத சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியின் போது இக்கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதுடன் இச்சந்தர்ப்பத்தின் போது தாமரைக் கோபுரத்தின் வணிகமயப்படுத்துவதற்காக தேவைப்படுகின்ற சில பதவிகள் உள்ளடக்கிய தாபன கட்டமைப்பினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இச்சந்தர்ப்பத்தின் போது பெறுகை ஆளணியின் தேவைப்பாடு உருவாகியிருக்காததனால் பெறுகை நடவடிக்கைகளுக்காக ஆளணியனர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தின் போது பெறுகை நடவடிக்கைகளும் பிரதான நிதி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களிடம் அரசாங்க பெறுகை நடவடிக்கை தொடர்பான முறையான அறிவு இருக்கவில்லை. எனினும் ஒரு பெறுகை முகாமையாளரினை மிக அண்மையில் சேர்த்துக்கொள்வதற்கும் எதிர்கால தேவைப்பாட்டிற்காக பெறுகை கால அட்டவணையை தயாரிப்பதற்கும் இக்கம்பனியால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரமின்றி சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படாதிருத்தல் வேண்டும்.<br>அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **வாகன தரிப்பிடத்திற்கு கொங்கிரீட் இடுதல்**<br>வாகன தரிப்பிடத்திற்கு கொங்கிரீட் இடுவது தொடர்பான ஒப்பந்தம் ரூபா 662,375 தொகையான ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு வழங்கப்படாது இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ரூபா 908,000 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்கிறேன்.<br>இந்த விழா 2022 திசெம்பர் 16 ஆந் திகதி ஈடுபடுத்தப்பட்டிருந்ததனால் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு 03 நாட்களுக்குள் முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆகக்குறைந்த கேள்வியை சமர்ப்பித்த நபருக்கு அந்த விலைக்கே வேலையைப் பூர்த்திசெய்யலாம் என எழுத்துமூலம் உறுதிப்படுத்தி தருமாறு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்த பதிலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இது ஒரு அத்தியவசியமான ஒரு செயற்திட்டமாக இருந்ததன் காரணமாக இது தொடர்பாக கலந்துரையாடியதன் பின்னர் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இது பொறியியலாளரின் பெறுமதியை மதிப்பீடு செய்ததன் அடிப்படையில் ஒப்பந்த்தினை வழங்குதல் இடம்பெற்றிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் நுழைவுச் சீட்டினை வழங்கும் இடத்திற்கும் பிரதான காவல் நிலையத்திற்கும் கெனபி கூரை நிர்மாணிப்பதற்காக ரூபா 350,000 வீதம் ரூபா 700,000 தொகை செலுத்தப்பட்டிருந்தும் அச்செலவு தொடர்பாக பரீட்சிப்பதற்காக பெறுகைக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளவில்லை.<br><br>கம்பனி நுழைவுச் சீட்டினை வழங்கும் இடத்திற்கு மாத்திரம் அல்லாது பிரதான காவல் நிலையத்திற்கும் கெனபி கூரை அமைத்தல் மீளாய்வாண்டு வரை இடம்பெற்றது. அதற்காக சேவைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ் இலக்கம் 56 மற்றும் இலக்கம் 18 ஆகிய சான்றிதழ் வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாகத்தின் தொழில் முயற்சிசகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் பந்தி இலக்கம் 3.2 (ii) இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாது கம்பனியின் அங்கீகரித்த ஆளணி மற்றும் சம்பளக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் அறிக்கையின் தொடர் இலக்கம் 11 இற்கு இணங்க ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை (SOR) அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதனை மேலும் அதற்கிணங்க அத்தியாவசியமான பதவிகளுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டு வணிகமயப்படுத்தல் இடம்பெறும் வரை உத்தேச சம்பள கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டு அதற்கிணங்க ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் அக்கூட்டத்தின் போது வழங்கப்பட்டது. | பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த ஆளணியினருக்கான சம்பள கட்டமைப்பு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு 80 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டிருந்தும் ஒவ்வொரு பதவிக்குமான தொடர்புபட்ட தகமைகள், சம்பள அளவுத்திட்டம், ஆட்சேர்ப்பு முறைமை என்பவற்றை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டது பொருத்தமான உத்தியோகத்தர்களா என்பதனையும் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியங்கள் நியாயமானதா என்பதனையும் கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | ஒவ்வொரு பதவிகளுக்குமுரியதான தகமைகள், சம்பள அளவுத் திட்டம் முதலிய விபரங்களுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை (SOR) தயாரிப்பட்பட்டிருந்தது. | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது பல்வேறு பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 80 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நியமனக் கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | அப்பதவிகளுக்கான ஒரு அறிக்கையை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அவர்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நியமனக் கடிதங்களின் பிரதிகள் தனிப்பட்ட கோவைகளில் இணைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு நியமனக் கடிதங்களின் பிரதிகள் உங்களுக்கு தேவைப்படுமாயின் உங்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமனக் கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | ஒவ்வொரு உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட கல்விசார் தகமைகளானது அவை வழங்கிய நிறுவனங்களிடமிருந்து பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | நேர்முகப் பரீட்சிப்பின் போது மூலப் பிரதிகள் பரீட்சிக்கப்படுகின்றன. மேலும் தற்பொழுது மனித வளங்கள் பிரிவினால் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தர சான்றிதழ்களும் தொழில்சார் தகமைகளுக்குரிய சான்றிதழ்களும் அவற்றினை வழங்கிய நிறுவனங்களிடமிருந்து பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | கல்விசார் மற்றும் தொழில்சார் தகமைகளுக்குரிய சான்றிதழ்கள் அவை வழங்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பரீட்சிக்கப்படுதல் வேண்டும். |